வலயக்கல்வி அலுவலகம் - வடமராட்சி

இரண்டாந் தவணைப் பரீட்சை - 2019

குடியியற்கல்வி

தரம் : 06 **நேரம் : 2 மணி**

பகுதி - I

மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

01. பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளின் தலைவராகச் செயற்படுபவர்
1) அதிபர் 2) ஆசிரியர் 3) மாணவர் 4) கல்விசாரா ஊழியர்

02. நீங்கள் பாடசாலையில் இணைந்துகொண்ட திகதியைச் சரியாக உறுதிசெய்ய உதவும் ஆவணம்
1) சம்பவ திரட்டுப் புத்தகம் 2) மாணவர் சேர்வு இடாப்பு
3) புள்ளிவிபரவியல் அறிக்கை 4) அதிபர் கூற்று

03. பின்வருவனவற்றில் மாணவர் கடமை அல்லாதது.
1) கல்வி கற்றல் 2) பௌதீக வளங்களைப் பாதுகாத்தல்
3) பாடசாலை நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்
4) ஆசிரியரை மதித்தல்

04. மாணவரிடம் காணப்படும் சிறந்த நற்பண்புகளில் ஒன்றாக அமைவது
1) பொறாமை 2) பொறுமை 3) கோபம் 4) ஒழுங்கீனம்

05. இலங்கையருக்கு இலவசக் கல்விமுறை கிடைக்கக் காரணமாக அமைபவர்
1) மகிந்த ராஜபக்ஷ 2) மைத்திரி 3) சேனக பிபிலே 4) C.W.W.கன்னங்கரா

06. தொன்றுதொட்டு பேணப்பட்டுவரும் பழக்கவழக்கங்களை ஏற்று நடத்தல்.
1) திட்டமிடல் 2) சம்பிரதாயம் 3) உரிமை 4) கடமை

07. பிள்ளையை மையமாகக் கொண்டு, சுகாதார வசதிகளையும் பாதுகாப்புச் சூழலையும் வழங்குகிற பாடசாலை
1) இசுறு பாடசாலை 2) லைற்கவுஸ் பாடசாலை
3) பிள்ளைநேய பாடசாலை 4) சர்வதேச பாடசாலை

08. இலங்கையிலுள்ள நிர்வாக மாவட்டங்களின் எண்ணிக்கை
1) 22 2) 25 3) 9 4) 5

கீழே தரப்பட்ட கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு 9ம் 10ம் வினாக்களுக்கு விடைதருக.

A - சமமாக மதிக்கப்படுதல்
B - ஒழுக்கம் பேணல்
C - சட்டத்தை மதித்து நடத்தல்
D - பாதுகாப்பாக இருத்தல்

9) மாணவர்களுக்குரிய உரிமைகளாக அமையும் தொகுதி
1) AD 2) AB 3) AC 4) BC

10) மாணவர்களின் கடமைகளைக் குறிக்கும் தொகுதி
1) AB 2) AC 3) AD 4) BC

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

11) பிறப்புச் சான்றிதழை அத்தாட்சிப்படுத்தும் நிறுவனம்
1) நகரசபை 2) பிரதேச செயலாளர் காரியாலயம்
3) மாவட்டச் செயலகம் 4) வைத்தியசாலை

12) மனித வளத்தை மேம்படுத்துவதற்கான பயிற்சியின் மூலம் ஏற்படும் நன்மை
1) தொழிற்தகைமை ஏற்படும் 2) பொருளாதார முன்னேற்றம்
3) நாடு அபிவிருத்தி அடையும் 4) மேற்கூறிய யாவும்

13) இயற்கை வளங்களின் தொகுதிக்குள் அடங்காதது
1) கட்டடம் 2) களப்பு 3) சமவெளி 4) நீர்

14) இலங்கையில் அதிகூடிய மாவட்டங்களை உள்ளடக்கிய மாகாணமாக அமைவது
1) மேல் மாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) வட மாகாணம் 4) தென்மாகாணம்

15) எமது நாட்டின் நிர்வாகப் பிரிவுகளுள் மிகச் சிறிய நிர்வாக அலகாகக் காணப்படுவது
1) மாவட்டம் 2) மாகாணம்
3) பிரதேசசெயலர் பிரிவு 4) கிராமசேவகர் பிரிவு

16) மாநகர சபையின் பொறுப்பாளர்
1) தவிசாளர் 2) தலைவர் 3) நகரபிதா 4) முகாமையாளர்

17) பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினுள் உள்ளடக்கப்படாதோர்
1) அதிபர் 2) மாணவர்
3) ஆசிரியர் 4) கல்வித் திணைக்களப் பிரதிநிதி

18) திட்டமிட்டுச் செயற்படும் மாணவனது இலட்சணமாக அமையாதது
1) புத்தாக்கத்தில் ஈடுபடுவார் 2) கருமம் ஒழுங்கின்றி அமையும்
3) நோக்கத்தை அடைவார் 4) படிப்படியாகச் செயற்படுவார்

19) ஆசிரியர்களின் கடமைகளில் ஒன்றாக அமையக்கூடியது?
1) நேரசூசி தயாரித்தல் 2) பிள்ளைகளைச் சேர்த்தல்
3) கணிப்பீடுகளை நடாத்தல் 4) மேற்பார்வை செய்தல்

20) நாம் இலவசமாகப் பெற்றுக்கொள்ளும் அரச சேவைகளில் ஒன்றாக அமைவது
1) தொலைத்தொடர்பு 2) மின்சாரம்
3) போக்குவரத்து 4) கல்வி

(20 x 2 = 40 புள்ளிகள்)

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK


facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

பகுதி - II


முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. அ) நாம் வாழும் பிரதேசமானது வெவ்வேறு நிர்வாக மட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ள விதத்தினைக் கீழுள்ள படம் காட்டுகிறது. ஒவ்வொரு மட்டங்களுக்கும் இடப்பட்ட எழுத்துக்களுக்கு ஏற்ற சரியான நிர்வாக மட்டங்களை எழுதுக.



(6 x 1 = 6 புள்ளிகள்)

ஆ) A, B, C, D, E, F என்பனவற்றுக்குப் பொருத்தமான விடைகளை எழுதுக.



(6 x 1 = 6 புள்ளிகள்)

02. 1. 'பாடசாலை' எனும் அமைப்பின் முக்கிய செயற்பாட்டினைக் குறிப்பிடுக.
2. உமது பாடசாலையின் வரலாற்றுத் தகவல்களை அறிந்துகொள்வதற்கு உதவியாக இருக்கும் மூலாதாரங்கள் நான்கு தருக.
3. உமது பாடசாலையின் ஒழுங்கமைப்பு மாதிரி அமைப்பை வரைந்து காட்டுக.

(2 + 4 + 6 = 12 புள்ளிகள்)

03. 1. பாடசாலை ஒழுங்கமைப்பில் அங்கத்துவம் வகிக்கக்கூடிய நபர்கள் இருவரைக் குறிப்பிடுக.
2. மாணவர்களின் கடமைகள் நான்கினைக் குறிப்பிடுக.
3. பாடசாலையின் தனித்துவத்தை அடையாளப்படுத்தும் இலட்சினைகள் நான்கைக் குறிப்பிடுக.

(2 + 4 + 6 = 12 புள்ளிகள்)

04. 1. உமது வீடு அமைந்துள்ள கிராம அலுவலர் பிரிவின் பெயரையும், பிரதேச செயலாளர் பிரிவின் பெயரையும் குறிப்பிடுக.
2. இயற்கை வளங்கள் இரண்டினையும் செயற்கை வளங்கள் இரண்டினையும் குறிப்பிடுக.
3. பௌதீக வளங்களைப் பாதுகாக்கும் முறைகள் நான்கினைத் தருக.

(2 + 4 + 6 = 12 புள்ளிகள்)

05. 1. உமது பிரதேச மக்களுடன் நீர் ஒற்றுமையாகச் செயற்படும் சந்தர்ப்பங்கள் 2 தருக.
2. ஒற்றுமையாகச் செயற்படுவதனால் கிடைக்கும் நன்மைகள் 4 தருக.
3. பொதுமக்களின் தேவைகளை நிறைவுசெய்ய உதவிபுரியும் நிறுவனங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(2 + 4 + 6 = 12 புள்ளிகள்)

06. 1. விசேட மனித வளங்களுக்கு உதாரணம் 2 தருக.
2. உங்கள் பிரதேசத்தில் நடைமுறையிலுள்ள 4 பொருளாதார நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
3. உள்ளூராட்சி நிறுவன சபைகளினால் மேற்கொள்ளப்படுகின்ற சேவைகள் நான்கினைத் தருக.

(2 + 4 + 6 = 12 புள்ளிகள்)

www.ikeu.lk